சுருக்கம்

தொழில்நுட்ப அனுமதி – பேரூராட்சித் துறையில் தொழில்நுட்ப அனுமதி வழங்கும் அதிகார வரம்பினை உயர்த்தி ஆணை வெளியிடப்படுகின்றது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரு2) துறை

அரசாணை (ப) எண். 405 நாள்: 03.8.2010

18, ஆடி, திருவள்ளுவர் ஆண்டு 2041

படிக்க:

1. அரசாணை (ப) எண். 166, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 12.4.2008.
2. பேரூராட்சிகளின் இயக்குநரின் கடித ந.க.எண். 7777/2008/ உ3, நாள் 23.4.2008 மற்றும் 07.7.2009.

*****

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் பேரூராட்சிகளின் ஆணையரக செயற்பொறியாளருக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கும் அதிகார வரம்பினை ரூ.40.00 இலட்சம் என உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட பேரூராட்சிகளின் இயக்குநரின் கடிதத்தில், பேரூராட்சிகளில் மேற்கொள்ளப்படும் பல்வேறு திட்டப் பணிகளுக்கான தொழில் நுட்ப அனுமதி வழங்குவதற்கான மதிப்பீடுகள் பேரூராட்சிகளின் ஆணையரக செயற்பொறியாளரால் ஆய்வு செய்து ஒப்புதல் வழங்கப்பட வேண்டியுள்ளது என்றும், எனவே நகராட்சிகள் நிர்வாக அமைப்பில் உள்ள மண்டல செயற் பொறியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ரூ.50.00 இலட்சம் வரையிலான அதிகார வரம்பினை போன்றே பேரூராட்சிகளின் ஆணையரக செயற்பொறியாளருக்கும் வழங்குவது மிகவும் அவசியமானதாகும் என்பதால், பேரூராட்சிகளின் ஆணையரக செயற்பொறியாளருக்கு மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் வழங்கப்பட்ட தொழில் நுட்ப அனுமதி வழங்கும் நிர்வாக வரம்பினை ரூ.40.00 இலட்சத்திலிருந்து ரூ.50.00 இலட்சமாக உயர்த்தி உத்திரவு பிறப்பிக்குமாறு அரசினை கோரியுள்ளார்.

3. மேலே பத்தி 2–ல் உள்ள பேரூராட்சிகளின் இயக்குநரின் செயற்குறிப்பை அரசு கவனமாக ஆய்வு செய்து, பேரூராட்சி செயற்பொறியாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும்

தொழில்நுட்ப நிர்வாக வரம்பினை ரூ.40.00 இலட்சத்திலிருந்து ரூ.50.00 இலட்சமாக உயர்த்தி ஆணையிடுகிறது.

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.29608/ந.நி.(ம)கு.வ./2010, நாள் 10.6.2010–ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகின்றது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அசோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்:
பேரூராட்சிகளின் இயக்குநர், குறளகம், சென்னை – 108.
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள் (சென்னை நீங்கலாக).
அனைத்து மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள்.
இயக்குநர், உள்ளாட்சி நிதிக் கணக்குகள், சென்னை – 108.
மாநில கணக்காயர், சென்னை – 18.
நகல்:
நிதித் (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்) துறை, சென்னை – 9.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை –9.
முதன்மைச் செயலரின் தனிச்செயலர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ.நெ.2/ வ.செ./தேர்தல்) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது./

3/8/10
பிரிவு அலுவலர்.
3/8/10.